## (ஊ) மகாவங்கித் தொழிற்பாடுகள்

1962ம் ஆண்டு, மார்கழி மாதத்தில் 1521 இலட்ச ரூபாய்களாக இருந்த மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி, 1963ம் ஆண்டு தை மாதத்தில் 41 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதாயினும், 2494 இலட்ச ரூபாய்கள் கொண்ட உச்சத்தை ஆனிமாதத்திலே அது அடையும்வரை, தொடர்ந்து நிதானமாக விரிவடைந்தது. அதன்பின்னர், புரட்டாதி மாதத்தில், இது 1782 இலட்சம் ரூபாய்களுக்கு நிதானமாக வீழ்ச்சியுற்று, ஐப்பசி மாதத்தில் 1945 இலட்ச ரூபாய்களுக்கு மேனேக்கிச் சென்று, மார்கழி மாதமளவில் மீண்டும் 1142 இலட்சம் ரூபாய்களுக்குத் தீட்சணமாக வீழ்ச்சியுற்றது. ஆகவே, சர்வதேச ஒதுக்குநிதியானது 1962லிருந்த இதற்கு நிகரான 326 இலட்ச ரூபாய்கள் கொண்ட, அல்லது 17.7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையிலே, வருடத்தின் போது, 379 இலட்ச ரூபாய்களால் அல்லது 24.9 சதவீதத்தால் (வெளிநாட்டுப்பணத்தினதும், மிச்சங்களினதும் வீழ்ச்சியைப் பூரணமாகப் பிரதிபலித்து) வீழ்ச்சியுற்றது. மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதியானது, நாட்டினது மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் 1962லிருந்த 30.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு முடிவின்போது 24.7 சதவீதத்தைக் கொண்டிருந்தது. மகாவங்கியின் மொத்த நாணயத்தினதும், கேள்விப் பொறுப்புக்களினதும் விகிதத்தில், சர்வதேச ஒதுக்குநிதியானது, 1962 லிருந்த 13.9 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டில் 9.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

மகாவங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள், மறுபக்கத்தில், அரசாங்கப் பிணைகளிலும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளிலும் 1395 இலட்ச ரூபாய்களால் அல்லது 15.8 சதவீதத்தாலும், அரசாங்கத்திற்கு மகாவங்கி வழங்கிய கடன்கள், முற்பணங்களில் 70 இலட்ச ரூபாய்களாலும், வர்த்தக வங்கிகளுக்கு மகாவங்கி கொடுத்த முற்பணங்களில் 379 இலட்ச ரூபாய்களாலும் ஏற்பட்ட அதிகரிப்புகளைப் பிரதிபலித்து, 1963ம் ஆண்டில் 1940 இலட்சம் ரூபாய்களால் அல்லது 17.6 சதவீதத்தால் 12944 இலட்ச ரூபாய்களுக்கு அதிகரித்தன. ஆகவே மகாவங்கியிடம் அரசாங்கம் பட்ட மொத்தக் கடன்பாடு, 1962லிருந்த 1789 இலட்ச ரூபாய்களுக்கெதிராக, 1963ம் ஆண்டில், 1465 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது.

மகாவங்கியின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள், பெரும்பாலும் சர்வதேசத்தாபனங்களின் வைப்புக்களில் 211 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக, 1963ம் ஆண்டில் 243 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தன.

மகாவங்கியின் நாணய வெளியீடு, சென்ற ஆண்டிலிருந்த அதிகரிப்பு விகிதத்தைவிட மிகக்கூடியதாக, 1963ம் ஆண்டு முழுவதும் நிதானமாக அதிகரித்தது. 1963ம் ஆண்டினது அதிகரிப்பானது, 1962லிருந்த 256 இலட்ச ரூபாய்கள் அல்லது 3.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1115 இலட்ச ரூபாய்களாக அல்லது 14.1 சதவீதமாக இருந்தது. அரசாங்கமும், வங்கிகளும் வைத்திருந்த நாணயம், 12 இலட்ச ரூபாய்களாலும், 31 இலட்ச ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றது. ஆனல் தனிப்பட்டோர்துறையின் இருப்புச் சொத்துக்கள், 1158 இலட்ச ரூபாய்களால் அல்லது 16.2 சதவீதத்தாற் தீட்சணமாக உயர்வுற்றன.

## கொடுகடன் கொள்கை

1963ம் ஆண்டில், குறிப்பாகக் கடைசி அரையாண்டின்போது, தனிப் பட்டோர்துறைக்கான வர்த்தக வங்கிகளினது கொடுகடனில்—பெரும்பாலும் இலங்கை வங்கிகளினூடாக—ஒரு தீட்சணமான அதிகரிப்பு ஏற்பட்டது. மகாவங்கியானது, இவ்வருடத்தின்போது வர்த்தக வங்கிக் கொடுகடனில் இருக்கும் முழுமையானதும், தேர்ந்தெடுத்ததுமான கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கப்படுத்தவில்லை. எனினும், இந்நடவடிக்கைகள், தொடர்ச்சியான திருத்தியமைத்தலின்கீழ் இருக்கின்றன. வங்கித் தொழிலும், கொடுகடன் வசதிகளும் ஆக்க வேலைத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நீண்டகாலக்குறிக்கோள்கள் முக்கியமுள்ளவையாக இருப்பினும், மொத்தக் கொடுகடன் ஆக்கமானது அளவுக்கு மீறிய அளவினதாக, குறிப் பாக வீக்கத்தன்மைகள் நிலவும் இப்போதைய நிலையில், அமையுமாயின் அது தெளிவாக விரும்பத்தகாததொன்றாகும். நாணய ஆட்சித்தலைமைக்கு நீண்டகாலக் குறிக்கோள்களைத் தொடர்வதற்கு இருக்கும் அநுகூலம்கூட, அரசாங்கம் நாணயவிரிவின் அளவைக்கட்டுப்படுத்துவதிற் கொள்ளும் வெற்றி யிலேயே தங்கியுள்ளது.

1963ம் ஆண்டில், கடன்நிதிகள் அவசியமல்லாத தேவைகளுக்குக் கணிச மான அளவிற் செலுத்தப்பட்டதற்கான நேரடியான சான்று எதுவும் இருக்க வில்லை. 1963ம் ஆண்டில், வங்கிக்கொடுகடனின் மொத்தத் தொகுதி, எல்லா வகையிலும், 1369 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்த போதிலும், இவ்வதிகரிப்பில் ஏறக்குறைய 250 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகை, வர்த்தக வங்கிகளாற் கொள்வனவு செய்யப்பட்ட ஏற்றுமதி இறக்குமதி உண்டியல்களின் அதிகரிப்பைப் பிரதிபலித்தது. தற் போதைய இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் இறுக்கமான எல்லையின் கீழ் அனுமதிக்கப்பட்ட, ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் நடமாட்டம் வசதியாக நடைபெறுவதற்குத் தேவையான, வேறுவகைப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிக் கடன்களை, மேலும் ஒரு 250 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகை, பிரதிபலித்தது. ஏறக்குறைய 310 இலட்ச ரூபாய்கள் கொண்ட வேறோர் தொகை, ஏனைய வர்த்தக முயற்சிகளுக்கு நிதியளிப்பதன் நிமித்தம் சென்றது. கையிருப்புக்களிலுள்ள உள்நாட்டில் உற்பத்தியான அரிசியைத் திரட்டும் நோக்கத்திற்கு அவசியமான, உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் இலங்கையர்களின் வங்கிகளால் அளிக்கப்பட்ட குறுகிய கால முற்பணங்களை, 140 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகையானது உள்ளடக்கியிருந்தது.

மிகுதியாயுள்ள ஏறக்குறைய 420 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகை யில், ஒரு பகுதி உற்பத்தியுடனும், விநியோகத்துடனும் நேரடித் தொடர்பு கொண்ட கடன்களுக்கும்—(கைத்தொழில் உற்பத்திக்கான வங்கியின் இணக்க மளிப்பு 170 இலட்ச ரூபாய்களால் உயர்ந்தது), ஒருபகுதி, கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கொடுக்கப்பட்ட இணக்கமளிப்புக்கும், ஒருபகுதி, வங்கிக்கொடு கடனுக்கு நேரடியான மாற்றாக, விளங்கக்கூடிய, பொதுவாகக் கடன் வாங்குபவருக்கு அதிகம் பொறுப்பாகவுள்ள நிலையங்களுக்கல்லாத வகை களிற் கொடுக்கப்படும் கடன்களுக்கும், வகை தந்தன. நுகர்ச்சித் தேவை களுக்கும், நிதித் தேவைகளுக்கும் வழங்கப்பட்ட கடன்கள் உண்மையில் முறையே, 130 இலட்சம் ரூபாய்களாலும், 150 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றன.

சில கடன்கள், குறிப்பாகச் சிறிய பாகுபாடுகளில் உள்ளவை, உற்பத்தித் தேவைகளுக்காகப் பெறப்பட்டு நுகர்ச்சிக்காகப் பாவிக்கப்பட்டிருப்பது, உண்மையிலேயே நடைபெறக்கூடியதொன்ருகும். மேலும், உற்பத்தித் தேவைகளுக்கான கடன்கள்கூடக் குறுகிய காலத்திற்குள் வீக்கத் தன்மையான தாக்குதலுக்கு உள்ளாகலாம். இக்காரணங்களை முன்னிட்டு, அண்மை நிகழ்ச்சிகள், அவசியமாயின் மகாவங்கியின் கொள்கையை முழுமையான கொடுகடனில் மிதமிஞ்சிய விரிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துவதற்கு, நெருங்கிய அவதானிப்பின் கீழ்த் தொடர்ந்து வைக்கப்படவேண்டியது முக்கியமானதாகும்.

1963ம் ஆண்டில், மகாவங்கியால் ஒருசில நீண்டகாலத் தவணையளிக்கும் கொடுகடன் தாபனங்களை ஒன்று சேர்ப்பதற்கான திட்டத்தின் இறுதிக் கட்டங்கள், அவற்றினது தொழிற்பாடுகளினது அளவை விரிவுபடுத்துவதனையும், பொருளாதார வளர்ச்சித் தேவைகளுக்கிணங்க அவற்றை நெருங்கிய தொடர்புள்ளனவையாக இணைப்பதனையும் நோக்கமாகக்கொண்டு, மேலும் ஆராயப்பட்டன. ஒன்று சேர்ப்பதற்கும், வங்கிவசதிகளில் முன்னேற்றமான விரிவு ஏற்படுத்துவதற்கும், வர்த்தக வங்கிகளுடன் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தாபிப்பதன் மூலம் வங்கித் தொழிற்பயிற்சி பெற்ற ஆளணி, போதுமான அளவு கிடைக்கும் வண்ணம் நிச்சயப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும், கவனிப்பின் கீழிருந்தன. நாணயவிதி அதிகாரச்சட்டத்திற்கு 1963ம் ஆண்டின் நிதி அதிகாரச்சட்டத்தாற் புகுத்தப்பட்ட திருத்தங்களின் எல்லையுள், மகாவங்கியிற் திருப்பி நிதியீட்டக்கூடிய வசதிகள் அளிப்பதன் மூலம் நீண்டகாலக்கடன் வசதியளிக்கும் தாபனங்கள், வர்த்தக வங்கித் தொழில்முறை இரண்டினுலும், நடுத்தரக்கால, நீண்டகாலக் கடன்களின் போக்கைத் தூண்டி விடும் திட்டத்தினது தொழிற்பாடுகளுக்கான ஏற்பாடுகள், இவ்வருடத்தின் போது முடிவாக்கப்படுகின்றன.

இறுதியாகக் கூறப்பட்ட தேவைகளுக்காக, மகாவங்கியில், ஒரு ''நடுத்தரகால, நீண்டகால கடன்நிதி'' உண்டாக்கப்படப் போகிறது. இந்நிதியின் மூலதனப்பொருட்கள்; இந்நிதியின் பொருட்களிலிருந்து வழங்கப்பட்டகடன்களின் மூலதனத் திருப்பிக் கொடுப்பனவுகளிலிருந்தும், வழங்கப்பட்ட கடன்களின் வட்டிகளிலிருந்தும், மகாவங்கியின் ஒதுக்குநிதிகளிலிருந்து நாணயச் சபையாற் காலத்திற்குக் காலம் இந்நிதிக்கு மாற்றப்பட்டு வரக்கூடிய நிதிகளிலிருந்தும், வரும். இந்நிதியின் பொருட்கள், மகாவங்கியாற் கொடுகடன் தாபனங்களுக்கு, ''உற்பத்தித் தேவைகளுக்காக'' இத்தாபனங்கள் முற்பணங்கள் கோரும்பொழுது, பயன்படுத்தப்படும். மகாவங்கியினுல் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்ட இணக்கங்கள், 15 வருடம் கொண்ட கால எல்லைக்குட் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியனவாக இருக்க வேண்டும் எனவும், கடன் பெறும் தாபனங்களுக்குக் கடன்காரர் கொடுத்த அடமானங்களை அல்லது ஈட்டு உறுதிகளை அத்தாபனங்கள் மகாவங்கிக்கு அடமானமாக நியமித்து ஒப்படைத்ததன் பேரில், இவை, வழங்கப்பட வேண்டும் எனவும், இச்சட்டம் விதித்துள்ளது.

மேலும், நாணயச்சபையானது, அவசியமானவை என அது கருதும் நிபந்தனைகளை, விதிக்கக்கூடும். இவற்றிற்குட்பட்டே கடன்களும், முற்பணங்களும் இந்நிதியிலிருந்து கிடைக்கக்கூடியனவாக இருக்கும். இப்பேர்ப்பட்ட கடன்களுக்கும், முற்பணங்களுக்கும், மகாவங்கி விதிக்கவேண்டிய வட்டி விகிதத்தையும், கடன் பெறும் தாபனங்கள் விதிக்கவேண்டிய வட்டி விகிதத்தையும், எவ்விதமான தேவைகளுக்குக் கடன்கள் பெறப்படவேண்டும் என்பதையும், கடன் பெறும் தாபனத்தின் கொடுகடன் கொள்கையோடு சம்பந்தப்பட்ட வேறு எந்த விடயங்களையும், நாணயச்சபை விதிக்கக்கூடும்.

இத்திட்டத்தின் தேவைகளுக்காகக் ''கொடுகடன் தாபனங்கள்'' என்பன, நாணயவிதி அதிகாரச்சட்டத்தின், பகுதி 127, உப-பகுதி (1)-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி எவ்வங்கித் தொழிற்தாபனத்தையும் குறிப்பதோடு, அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தையும் உட்படுத்துகையில்; ''உற்பத்தித் தேவைகள்'' என்பன, நாணயச்சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய, விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வாணிபம் அல்லது வியாபாரம் ஆகியனவற்றின் வளர்ச்சியைத் தூண்டத்தக்க எந்தத் தேவைகளையும் குறிப்பனவாகும்.

---

*இப்பயிற்சி பெறுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களின்கீழ், 1964-ம் ஆண்டு, மாசி மாதம், வகுப்புகள் ஆரம்பமாயின.